சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 11.05.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 107/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-6 |
| சாட்சியின் பெயர் | : | கருணாநிதி |
| தந்தை பெயர் | : | கோபால் |
| கிராமம் | : | ஆலத்தூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 60 |

2026 ம் ஆண்டு மே மாதம் 11 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 4, 6 மற்றும் 8 எதிரிகள் ஆஜர். 3 மற்றும் 5 ம் எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் தற்போது ஆஜராகியுள்ள எதிரிகளை தெரியும். எங்கள் ஊருக்கு அருகாமையில் உள்ளவர்கள் என்பதால் அவர்களை எனக்குத்தெரியும். எங்கள் ஊருக்கு அருகாமையில் உள்ள திருமியச்சூரை சேர்ந்த நாவலன் என்பவரை எனக்குத்தெரியும். அவர் எப்படி இறந்தார் என்றால், கொலை செய்யப்பட்டு இறந்தார். இந்த வழக்கு தொடர்பாக எனக்கு என்ன தெரியும் என்றால் எனது வயலுக்கு அருகாமையில் உள்ள இரண்டு வயல்களை தாண்டி கொடியலூர் கிராமத்தில் உள்ள எல்லை உள்ளது, அந்த இடத்தில் 16.01.2011-ம் தேதியன்று மாலை 05.00 மணியளவில் சிவன் கோவில் அருகாமையில் நான் மாடும் கன்றுகுட்டியும் மேயத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஆஜர் எதிரிகளும் மற்றும் சிலரும் மொத்தம் ஒன்பது நபர்கள் வந்தார்கள். அவர்கள் அனைவரும் நான்கு ஐந்து இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். ஆஜராகியுள்ள எதிரிகளின் பெயர்களை எனக்குத்தெரியும். இன்று ஆஜராகியுள்ள நான்கு எதிரிகளை தவிர அந்த இடத்திற்கு வந்த மேலும் ஐந்து நபர்களின் பெயர்கள் எனக்குத்தெரியும். சிவன் கோவில் அருகாமையில் தூங்குமூஞ்சி மரம் ஒன்று உள்ளது. அந்த இடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு பன்னீர்செல்வம் (7-ம் எதிரி இறந்துவிட்டார்) நாவலன் என்பவரை இரண்டு நாளில் போட்டு தள்ளவேண்டும் என்று அருகில் இருந்தவரிடம் சொன்னார். மேலும், அவர் இருப்பது இடைஞ்சலாக இருக்கு என்றும் அவரை விட்டுவைக்க கூடாது என்று பேசிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள். சிறிது நேரம் கழித்து நான் மாட்டை ஓட்டிவிட்டு போய்விட்டேன். வீட்டுக்கு வந்து என் மனைவியுடம் சொன்னேன் என் மனைவி அதைப்பற்றி பேசவேண்டாம் என்று சொன்னார். பின்னர் 19-ம் தேதி சாயங்காலம் 7.30 மணியளவில் நாவலன் என்பவரை கீழமாங்குடி என்ற இடத்தில் வெட்டிவிட்டதாக

கேள்விப்பட்டேன். மறுநாள் துக்கத்திற்கு சென்றேன். பின்னர் ஒரு மாதம் கழித்து போலிசாரிடம் நான் சொன்னேன். இது சம்பந்தமாக உயர்காவல் அதிகாரி என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** -

நாவலன் என்பவர் திருமியச்சூர் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் தண்டந்தோப்பு கிராமத்தை சேர்ந்தவர். நான் ஆலத்தூர் கிராமத்தை சேர்ந்தவர். திருமிச்சூருக்கும், தண்டந்தோப்பிற்கும் 1/2 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். தண்டந்தோப்புக்கும் ஆலத்தூருக்கும் இடைவெளி எவ்வளவு இருக்கும் என்றால் 1/2 கிலோ மீட்டர் இருக்கும். 6, 7 பைக்கில் வந்தவர்கள் 15 நிமிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். அங்கு வந்த நபர்கள் அனைவரும் எனக்கு தெரியும் என்றால் தெரியும். 6, 7 பைக்கில் வந்த அந்த நபர்கள் பேசிக்கொண்டிருந்ததை வைத்துக்கொண்டு அவர் இருசக்கர வாகனத்தில் வந்த அனைவரும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் அவர்களுக்கு வீடு நிலம் உள்ளதா என்றால் உண்டு. இறந்துபோன நாவலன் எனது உறவினரா என்றால் இல்லை. நானும், நாவலனும் ஒரே கட்சியை சேர்ந்தவரா என்றால் இல்லை. நாவலன் என்பவர் அரசியல் பணியின் காரணமாக எங்கள் பகுதிகளுக்கு வருவார் அதன் மூலம் தெரியும். எங்கள் ஊரிலும் நாவலன் சார்ந்திருந்த கட்சிக்காரர்கள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். நாவலன் இறந்துபோன மறுநாள் துக்கத்தில் நான் கலந்துகொண்டேன் என்று சொன்னால் ஆமாம். அப்பொழுது திருமியச்சூர், தண்டந்தோப்பு, ஆலத்தூர் ஆகிய கிராமங்களை சேர்ந்தவர்களும் துக்க நிகழ்ச்சியில் இருந்தனர் என்று சொன்னால் வந்திருந்தார்கள். திருமியச்சூர், தண்டந்தோப்பு, ஆலத்தூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த அவர்களுடைய கட்சியை சேர்ந்தவர்களும் வந்திருந்தார்கள் என்று சொன்னால் வந்திருந்தார்கள். ஒரு மாதம் கழித்து ஏன் கூறுகிறேன் என்ற விபரத்தை போலிசார் என்னிடம் கேட்கவும்

இல்லை நான் அவரிடம் சொல்லவும் இல்லை என்று சொன்னால் ஆமாம். நான் காவல் நிலையம் சென்றபோது எனது மனைவியை அழைத்து செல்லவில்லை என்று சொன்னால் ஆமாம். இறந்துபோன நாவலன் சார்ந்திருந்த கம்யூனிட் கட்சியை நான் இருந்தேன் என்றும் மற்றும் நாவலன் உறவினர் கேட்டுக்கொண்டதன் பேரிலும் 16.01.2011-ம் தேதி 5, 6 பைக்கில் வந்து பேசினார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

கடந்த 16.01.2011-ம் தேதி மாலை 05.00 மணியளவில் கொடியலூர் கிராமத்தில் ஆஜராகியிருந்த ஒன்பது நபர்களில் தற்போது நீதிமன்றத்தில் இன்று வருகை தந்துள்ள நான்கு எதிரிகளை தவிர மற்ற நபர்களின் பெயர்களை தெரியுமா என்றால் தெரியும். பன்னீர்செல்வம் (7-ம் எதிரி), ஜீவா (3-ம் எதிரி), செல்வம் (9-ம் எதிரி), பிரகாஷ் (2-ம் எதிரி), வெட்டுக்கிளி ஆவார்கள்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தற்பொழுது நீதிமன்றம் கேட்ட கேள்விக்கு பின்னர் இது தொடர்பாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென அனுமதி கோருகிறார் அனுமதி மறுக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.11 18:11:43 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.